DEPOSITION OF WITNESS

**In the Court of II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.160/2023**
**Present – S.Gopinathan, B.Sc.,B.L.,**
**II Additional District and Sessions Judge, Tiruchirappalli.**
Prosecution witness -14 (LW -18)
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர்.திரு.குழந்தைவேல் | Caste | : | |
| Father Name | : | திரு.ராஜலிங்கம் | Calling | : | மருத்துவர் |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 71/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **01.11.2025.**

**PW -14 (LW -18 )**

(எதிரிகள் ஆஜர்.) (சாட்சி அவருடைய ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலிசார் மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

**முதல் விசாரணை:**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், தங்கம் மருத்துவமனையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.06.2021–ம் ஆண்டு இரவு 11.40 மணியளவில் நாமக்கல் மாவட்டம், மாருதி மருத்துவமனையில் இருந்து மேல்சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டு சிகிச்சைக்காக வந்த செல்லப்பன் என்பவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரை அவரது மகன் ரமேஷ் அழைத்து வந்தார்.

அவர் கடந்த 09.06.2021 அன்று மாலை 05.00 மணியளவில் 3 தெரிந்த நபர்களால் இரும்பு ராடு (கடப்பாறை) கொண்டு தாக்கியதாகவும், அந்த தாக்குதல் அவரது தோட்டத்தில் நடந்ததாகவும் அவரே சொன்னார். அவரை நான் பரிசோதனை செய்யும் பொழுது அவர் சுயநினைவில் இருந்தார். தனக்கு நெஞ்சு வலிப்பதாக கூறினார். அவருடைய தலை மற்றும் கால் காயத்திற்கு மாருதி மருத்துவமனையில் ஏற்கனவே முதலுதவி செய்யப்பட்டு எம்எல்சி வழக்காக

II ADDL COURT, TRICHY

HIGH COURT OF MADRAS



இருந்துள்ளது. நெஞ்சில் ஏற்பட்ட காயத்திற்காக எங்கள் மருத்துவமனைக்கு வந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது தலையில் 4 X 2 X 1 செ.மீ அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

2. நெஞ்சில் இடது பக்கத்தில் மார்பு காம்புக்கு அருகில் பல்வேறு அளவில் சிராய்ப்பு காயங்களும், ரத்தகட்டும் காணப்பட்டது.

3. இடது தொடையில் இருந்து கீழ் பகுதி வரை மாவுக்கட்டு போட்டு சிகிச்சைக்கு வந்தார்.

அவருக்கு நெஞ்சு பகுதியில் சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அவரது இடது நுரையீரலில் சுருங்கியும், காற்று கட்டி கொண்டும் காணப்பட்டது. மற்ற நுரையீரல் பாகங்களில் ரத்த கசிவு தென்பட்டது.

4. நான்காவது விலா எலும்பு உடைந்து காணப்பட்டது.

5. கால் பகுதியில் எக்ஸ்ரே எடுக்கப்பட்டிருந்தது. அதில் டிபியா என்ற எலும்பில் மேல் பகுதியிலும், கீழ் பகுதியிலும் 2 எலும்பு முறிவுகள் தென்பட்டன.

அவருக்கு ஏற்பட்ட காயங்களில் தலையில் சிடி ஸ்கேன் எடுக்கும் பொழுது சீராக இருந்தது. தலை காயத்தை தவிர மற்ற காயங்கள் அனைத்தும் கொடுங்காயங்கள் ஆகும். அவர் 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகு அவர் மருத்துவ சிகிச்சை முடிந்து விடுவிக்கப்பட்டார். எங்களிடம் அவர் சிகிச்சைக்கு வந்த காரணம் இடது நுரையீரல் பகுதியில் Intercostal Drainage மூலம் சிகிச்சைக்காக வந்தார். நுரையீரலில் இருந்த காற்று வெளியே எடுக்கப்பட்டது. சுருங்கியிருந்த நுரையீரல் இயல்பு நிலைக்கு வந்தது. அந்த நுரையீரல் செயற்கை குழாயை எடுத்துவிட்டு 14.06.2021 அன்று நாங்கள் மாருதி மருத்துவமனைக்கே அவரை மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். நான் கொடுத்த காயச்சான்று **அ.த.சா.ஆ.10** ஆகும்.

**எ.த.கு.வி:**

| | |
|---|---|
| **கேள்வி** | செல்லப்பன் சிகிச்சைக்கு வந்த பொழுது மாருதி மருத்துவமனையில் எடுத்து கொண்ட சிகிச்சைக்கான ஆவணங்களுடன் தான் வந்தார் என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | எம்எல்சி வழக்கு என்று இருந்தும் நீங்கள் விபத்து பதிவேடு பதிவு செய்தீர்களா? |
| **பதில்** | ஆம். |
| **கேள்வி** | அந்த விபத்து பதிவேட்டை போலீசார் வசம் கொடுத்தீர்களா? |
| **பதில்** | கொடுத்தேன். |
| **கேள்வி** | செல்லப்பன் உங்களிடம் அருவாள் மற்றும் கட்டை போன்ற ஆயுதங்களால் தாக்கியதாக சொல்லவில்லை என்றால்? |
| **பதில்** | சரிதான். |
| **கேள்வி** | காயச்சான்றிதழில் செல்லப்பன் விடுவிக்கப்பட்ட தேதி குறிப்பிட்டுள்ளீர்களா? |
| **பதில்** | சரிதான். ஆனால் மருத்துவ சிகிச்சை ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேன். |
| **கேள்வி** | 21.06.2021 என்று அ.த.சா.ஆ.10–ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்? |
| **பதில்** | சரிதான். அது காயச்சான்று கேட்கும் பொழுது கொடுக்கப்பட்டதால் அந்த தேதி கொடுக்கப்பட்டுள்ளது. |
| **கேள்வி** | போலீசார் உங்களிடம் வந்து கேட்டதால் 21.06.2021 என்று தேதியிட்டு கொடுத்தீர்களா? |
| **பதில்** | இல்லை. நான் 21.06.2021 அன்று தான் காயச்சான்றிதழ் கொடுத்தேன். |

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 01.11.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,
இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.
தேதி: 01.11.2025

MADURAI HC TRICHY